# SG Digital

Singpass செயலியின் பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

உங்களது நம்பகமான மின்னிலக்க அடையாளமான சிங்பாஸ் செயலியுடன், இணையத்திலும் நேரிலும் சேவைகளை நாடும்போது உங்கள் அடையாளத்தை நீங்கள் எளிதில் நிரூபிக்கலாம். அதோடு, முக்கிய தகவல்களையும் கையோடு வைத்திருக்கலாம்.

## படிநிலை 1 — உங்கள் திறன்பேசியில் Singpass செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்

**Apple App Store**, **Google Play Store** அல்லது **HUAWEI AppGallery**-க்குச் சென்று, Singpass மொபைல் செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள். அந்தச் செயலி அரசாங்கத் தொழில்நுட்ப அமைப்பால் உருவாக்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

1. IOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்கம் செய்ய “**Get**” மீது தட்டுங்கள்.
2. Android அல்லது HUAWEI பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Install**' என்பதைத் தட்டுங்கள்.

## படிநிலை 2 — ஒருமுறை விவரங்களைப் பதிவு செய்திடுங்கள்

பதிவு செய்வதற்கு, உங்களுக்குத் தேவை:

1. இணைய இணைப்பு
2. Singpass அடையாளப் பெயரும் மறைச்சொல்லும்
3. பொருந்துமாயின், உங்களது தற்போதைய 2FA இரட்டை மறைச்சொல் (குறுந்தகவல் ஒரு முறை மறைச்சொல்).




3. உங்களது நம்பகத்தன்மை சான்றிதழில் **உங்கள் விவரங்களைச் சரிபாருங்கள்**.




4. **மறைச்சொல்லை அமைத்திடுங்கள்** மற்றும் /அல்லது கைரேகை / முக அடையாளத்தை நிறுவுங்கள்.




5. சேவைகளை அணுகும் வழிமுறையைப் படித்து தெரிந்துகொள்ளுங்கள்.

## படிநிலை 3 — சிங்பாஸ் செயலியைப் பயன்படுத்தி சேவைகளை நாடுங்கள்

உட்பதிவு குறுக்குவழி இணைப்புகளைப் பயன்படுத்தி மின்னிலக்கச் சேவைகளில் உட்பதிவு செய்யுங்கள்




6. சிங்பாஸ் செயலியைத் திறந்த பிறகு **கீழே உள்ள உட்பதிவு குறுக்குவழி இணைப்புகளுக்குச் செல்லுங்கள்**.




7. நீங்கள் நாட விரும்பும் **மின்னிலக்கச் சேவைமீது தட்டுங்கள்**.

*குறுக்குவழி இணைப்புகளின் முழுப் பட்டியலைக் காண “**குறுக்குவழி இணைப்புகள் அனைத்தையும் பார்**” என்பதன்மீது தட்டுங்கள்*

*உங்கள் வசதிக்காக **நீங்கள் கடைசியாகப் பயன்படுத்திய** குறுக்குவழி இணைப்புகள் காட்டப்படும்!*




8. கைரேகை, முக அடையாளம் அல்லது மறைச்சொல் **பயன்படுத்தி உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துங்கள்**.




9. **உங்கள் கைப்பேசி உலாவியில் சேவைக்கு உட்பதிவு செய்து விட்டீர்கள்!** பரிவர்த்தனை முடிந்தவுடன் மறக்காமல் மின்னிலக்கச் சேவையிலிருந்து வெளியேறிவிடுங்கள்.

முகப்புகளில் உங்கள் அடையாளத்தை நிரூபித்திடுங்கள்




நேரில் சேவை பெறும்போது அரசாங்க முகப்புகளில் சிங்பாஸ் செயலியில் உள்ள **உங்களது மின்னிலக்க அடையாள அட்டையைக் காட்டுங்கள்**.

*உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் **+65 6335 3533** என்ற எண்ணில் சிங்பாஸ் உதவிச் சேவையை அழையுங்கள்*

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- உங்களது உட்பதிவு விவரங்களை யாரிடமும் சொல்லாதீர்கள். ஏனெனில், உங்கள் கணக்குகளும் தனிப்பட்ட விவரங்களும் அனுமதியின்றி அணுகப்படலாம்.
- உங்கள் திறன்பேசியில் உங்களது சொந்த கைரேகையையும் முக அடையாளத்தையும் மட்டுமே பதிவு செய்யுங்கள்.
- உங்கள் பரிவர்த்தனையைச் செய்து முடித்தவுடன் மின்சேவையிலிருந்து எப்போதும் வெளியேறிவிடுங்கள்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY